**செய்தி வெளியீடு எண் : 1203** **நாள் : 17.07.2022**

## தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ்நாடு நாள் விழா

தமிழ்நாட்டிற்கு தமிழ்நாடு என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயர் சூட்டிய சூலை 18 (1967) ஆம் நாளையே தமிழ்நாடு திருநாளாக இனி கொண்டாடப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, சென்னை கலைவாணர் அரங்கில் தமிழ்நாடு நாள் விழா நாளை 18.07.2022 திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் மாநிலத் திட்டக் குழு, துணைத் தலைவர் முனைவர் ஜெ.ஜெயரஞ்சன் அவர்கள் தலைமையில், கருத்தரங்கம் நடைபெறவுள்ளது. இந்தக் கருத்தரங்கில், சமூக நீதி கண்காணிப்பு (ம) பாதுகாப்புக் குழுத் தலைவர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் அவர்கள் "தமிழ்நாடு உருவான வரலாறு", திரு.ஆழி செந்தில்நாதன் அவர்கள் "மொழிவாரி மாகாணமும் தமிழ்நாட்டில் நடந்த போராட்டமும்", திரு. வாலாசா வல்லவன் அவர்கள் "தமிழகத்துக்காக உயிர் கொடுத்த தியாகிகள்", முனைவர் ம. இராசேந்திரன் அவர்கள் "தாய்நாட்டுக்குப் பெயர் சூட்டிய தனயன்", சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா. எழிலன் அவர்கள் "முத்தமிழறிஞர் கலைஞர் உருவாக்கிய நவீன தமிழ்நாடு" ஆகிய தலைப்புகளில் கருத்துரையாற்றுகிறார்கள்.

கலைவாணர் அரங்கத்தில் தொல்லியல் துறை சார்பாக அமைக்கப்படும் தொல்பொருட்கள் கண்காட்சியில் கீழடி, ஆதிச்சநல்லூர், சிவகளை, மயிலாடும்பாறை, கொடுமணல் ஆகிய இடங்களில் நடைபெற்ற அகழாராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்டுள்ள அரியவகை தொல்பொருட்களும் காட்சிப்படுத்தப்படுகின்றன. மேலும், தமிழ்நாடு நில அளவைத் துறை சார்பில் சென்னை மாகாணத்தின் பழைய மற்றும் தற்போது வரையிலான ஆவணங்கள் மற்றும் வரைபடங்கள் காட்சிப்படுத்தப்படுகின்றன.

இவ்விழாவினையொட்டி, சென்னை காமராஜர் சாலை மெரினா கடற்கரையில் ஒடிசாவைச் சேர்ந்த புகழ்மிக்க மணற்சிற்பக் கலைஞர் பத்மஸ்ரீ திரு.சுதர்சன் பட்நாயக் அவர்களால் தமிழ்நாடு நாள் சிறப்பு மணற்சிற்பமும் உருவாக்கப்படுகிறது.

கலை பண்பாட்டுத்துறை சார்பில் தமிழ்நாடு நாள் விழாவினை முன்னிட்டு மணற்சிற்பம் உருவாக்கப்படும் மெரினா கடற்கரை, எலியட்ஸ் கடற்கரை, செம்மொழிப் பூங்கா மற்றும் சென்டரல் சதுக்கம் ஆகிய 4 இடங்களில் கலை நிகழ்ச்சிகள் மாலை 5 மணி முதல் 7 மணி வரை

நடத்தப்படுகிறது. இத்துறை சார்பில் தமிழ்நாட்டில் கோவை, மதுரை, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி வாயிலாகவும், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, சேலம், ஈரோடு, கரூர், பெரம்பலூர், விழுப்புரம், கடலூர், சீர்காழி, திருவாரூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய 20 இடங்களில் அரசு இசைப் பள்ளி வாயிலாகவும், இயல், இசை, நாட்டியம் மற்றும் கிராமியக் கலை நிகழ்ச்சிகளோடு தமிழ்நாடு நாள் விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

சென்னை காமராஜர் சாலை விவேகானந்தர் இல்லம் எதிரில் மெரினா கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு நாள் சிறப்பு மணற்சிற்பம் மற்றும் கலைவாணர் அரங்கில் அமைக்கப்பட்டுள்ள சிறப்புக் கண்காட்சி ஆகியவை 18.07.2022 முதல் 20.07.2022 வரை மூன்று நாட்கள் காட்சிப்படுத்தப்படுகிறது. இக்கண்காட்சிகளை பெருந்திரளான பொதுமக்கள், மாணவர்கள், இளைஞர்கள் கண்டு பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in